# இந்துசாதனம்

விரோதி வருஷம் (1889) ஆவணி மாதம் 28-ச்உ ஆரம்பமானது.

செவ்வாய் வெள்ளி தோறும் வெளி வருவது

Registered as a News Paper in Ceylon P M G No. H A 59/300 of 1939

மாசில் வீணையும் மாலே மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சுடு] யாழ்ப்பாணம்:- கர வருஷ மாசி மீ கo உ வெள்ளிக்கிழமை (22 பிப்ரவரி 1952) [இல - அசு]


# செழுஞ்சு[ட]ராகித் திகழ்ந்த திருநாள்

## சிவரா[த்]திரி விரதச் சிறப்பு

மஹா சிவராத்திரி விரதம் மாசி மாசத்து அபரபக்கச் சதுர்த்தசி இரவில் அநுட்டிக்கப்படுவது. இவ்விரவில் நித்திரையின்றி உபவாசமிருந்து நான்கு யாமமும் சிவபூசை செய்தல் முறை. சிவபூசையில்லாதவர் நித்திரையின்றி உபவாசமிருந்து பஞ்சாட்சர செபம் செய்தும் சிவசரிதை சிவனடியார் சரிதைகளைப் படித்தும் சிவாலய தரிசனஞ் செய்தல் வேண்டும்.

### சிவராத்திரி உற்பத்தி

நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதமகா முனிவர் எடுத்துக் கூறிய சிவராத்திரி விரத உற்பத்திச் சரிதைகளுள் ஒன்றை ஈண்டுக் கூறுதும். பிரமகற்ப இறுதியொன்றில், படைத்தற் கடவுளாகிய பிரமாவும், அவரால் ஆக்கப்பெற்ற உலகங்களும் உயிர்களும் ஒடுங்கின. "ஏவை ஓவர் அத ஏறும் அவை... ஒடுங்கி மலத்துளதாம்..." (சிபோ) என்றபடி அவற்றை மீளத் தோற்றுவிக்குமாறு மகாவிஷ்ணு மூர்த்தியானவர் நான்முகனுகிய பிரமாவைத் தமது உந்தாங்க மலத்தினின்றுதவியபின், முன்போல உலகுயிர்களை அமைக்குமாறு அவரைப் பணித்தனர். அவ்வாறு பணித்துவிட்டுத் திருப்பாற்கடலின் மத்தியில் சர்ப்ப சயனத்தின்மேல் அறிதுயில் புரிந்தனர்.

பிரமாவானவர், உலகுயிர்களெல்லாவற்றையும் மீட்டுந் திறம்படப் படைத்து, அவற்றின் வளங்களைப் பார்த்து மகிழ்ந்து, தம் பெருமையையுன்னி, என்னிலும் மேலானார் இங்கு யாருமில்லையென்று தருக்குற்றனர். தருக்குற்றவரில் நில்லாது, யோக நித்திரை செய்யும் விஷ்ணு மூர்த்தியை யடைந்து இங்கு நித்திரை செய்கின்ற நீ, யார் எழுந்திரு என்று வினவ, விஷ்ணுவுந் துயிலநீத்தெழுந்து, இவ்வாறு வினவிய நீ, யார் என எதிர் வினு நிகழ்த்தினர். அகில உலகுயிர்களையுந் தனியே ஆக்கிய முதற்பொருள் தாமென மலரோன் மொழிதலும், தம் முன் நிற்கும் நான்முகன் முதலாய முழுதுக்குந் தனித் தலைவன் தாமெனக் கூறினர்விண்டு. இவ்வாறொருவர்க்கொருவர் கர்வமொழி கூறிச் சமர் செய்தலும், பரமபதியானவர் அன்னவரிடையில் அக்கினிப்பிழம்பாயெழுந்தருளினர்.

இதைக்கண்ட பிரமவிட்டுணுக்கள் முறையே அன்னமும் பன்றியுமாகி இதன் அடிமுடி தேட முயன்று, அவற்றைக் காணமுடியாது இளைத்து, அச்சமும் வெட்கமுமுடையராய் மீண்டனர். திருவடியிரண்டுங் காட்டுமாறு மெய்ப்பொருளை வேண்டினர். அன்னவர் கட்புலனகளுக்கமைபத் தன திருவுருவத்தைக் காட்டியருளினர் சிவபிரான்.

மாசி மாதத்திற் றேன்று
மதிக்கலை குறைந்து தேயு
மாசில் பன்னுங்காம் பக்கத்தகா
யிருளி யாமத் தன்னிற்
றேசினுல் விளங்குஞ் சோதிச்
செழுஞ்சுடராகி நின்ற

## ஐம் புலன் அடக்கும் அருந் தவம் முயல்க!

காசிலா ஞதற்கட் பெம்மான்
றன தருக்காட்டி நின்றுன்
என்பதனுலிஃதறியக்கிடக்கின்றது.

அருள்காச்செழுந்த திருவுருக் காண்டலும், அருள்ஞான மூர்த்தியே, ஆன்மாக்களுக்கெல்லாம் உயிர்க்குயிராகி, இறப்புப் பிறப்பு முதலியவில்லாப் பரம்பொருளாகிய சோதிவடிவினரே எங்கள் முதல்வரே தேவரீர் திருவடிகள் போற்றி என்றின்ன பலவாறு துதிக்கத் தொடங்கினர்.

ஒதி[ய]ா யனுவா யெண்ணி
லுயிர்க்குயிராகி யென்றும்
பேதியாப் பரமதாகிப்
பிறப்புட னிறப்பிலாமற்
சோதியா யெழுதாக்கேள்விச்
சுருதியின் முடிவாயெங்கட்
காதியா யாதியாகு
மடிகளின்னடிகள் போற்றி.

..............................

காலனுர் விழத்தாக்குங்
கழைகழற்காலா போற்றி
மூலமாம் பொருளுக்கெல்லா
முழுமுதற் பொருளேபோற்றி
பாலநேத்திரனே போற்றி
படர்திரைப் பாலின்வேலை
யாலமுண் டிருண்டகண்டத்
தண்ணலே போற்றி போற்றி

..............................

என்று பலவாறு போற்றித் துதித்தலும் அன்னவர் வேண்டியவாறு பரமபிதாவானவர் அவர்தம் பதங்களை மீட்டும் ஈந்தருளி, இச் சிவதிசிபொருந்துந் தினங்களில் முறைப்படி பூசனை புரிவீராகில் நீவிர் விரும்பியவெல்லாம் விரும்பியவாறு பெறுவீர்; ஏனையோரும் இந்த விரதத்தை யிவ்வாறு அநுட்டிப்பாராகில், தாம் விரும்பிய போகங்களையும் பெற்று முத்திப்பேற்றையுமடைவர் எனத் திருவாய் மலர்ந்தருளினர். இஃதே சிவராத்திரி விரத உற்பத்தியென்க.

### இதன் மகிமை

இது விரதங்களெல்லாவற்றுள்ளுந் தலை சிறந்தது. வேதங்களுள்ளே சாமவேதமும், யாகங்களுள்ளே அசுவமேத யாகமும், மலைகளுள்ளே மகா மேருவும், நதிகளுள்ளே கங்காநதியும், பூதங்களுள்ளே ஆகாயமும், தேவர்களுள்ளே இந்திரனும் முதன்மை பெற்று விளங்கினுற்போல விரதங்களுள்ளே சிவராத்திரி முதன்மை பெற்று மிளிர்வது.

"மறைகளிற் சாம
மகங்களிற் புரவிமக
மலைகளின் மகமேரு
நிறைபுன னதியிற்
கங்கையோ வாரதாய்
நிகழ்ந்த பூதத்திலாகாய
முறை தெரிசுரர்ற்
கருமுகிலூர்தி முதல்வன்
பெறலுயர்ந்த ...

வறைதருவிரத மனைத்தினு
மூரைக்கு மானிர
வதிக மென்றறிமின்!"
என்பதனுலிஃதறியக் கிடக்கும்

அகில உலகங்களையும் படைத்துக் காக்கும் பிரமவிட்டுணுக்களின் பதவிகளே இத் தன்மையனவென்றறியத் தக்கு இதனுலே திருவருளை யின்றி, ஒன்றும் எம்மாலமையாதென்பது இனிது விளக்கப்பெற்றுச் சிவ பரம்பொருளின் றடங்கருணைத் திறமிஃதெனவுணர்ந்தோம். இவ்வுணர்வு சித்தித்து நிலைபெறும்பொருட்டே தாமமான சுவாமிகளும் தமது திவ்விய திருவாய் ...

தொடர்ச்சி 3-ம் பக்கம்

---

என் மனத்தினுள்ளே வரும் பெருமான்

திருச்சிற்றம்பலம்

பெரும்பெரு மானென் பிறவியைவே ரறுத்துப் பெரும்பிச்சுத்
தருபெரு மான்சது ரப்பெரு மானென் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோனெடு மாலறி யாமனின்ற
அரும்பெரு மானுடை யாயடி யேனுன் னடைக்கலமே.

திருச்சிற்றம்பலம்

---

திருத்தொண்டர் திருநாள்

## தமிழ்க்கோவை தொகுத்தமைத்த நாயனுர்

### பரிசு நிதி கொண்டு அரன் பணியாற்றிய அடியார்

நம்பனடியார்க்கு நல்கூத் திரவியங்கள் ஆகாவாம் என்ற உண்மையறிந்து செந்தமிழ்பாடிப் பெற்ற பொன்னைச் சிவனடியார்பால் உபயோகித்த காரிநாயனுர் திருநாள் .... ...

திருக்கடவூரிலே காரி நாயனுர் என்பவர் ஒருவரிருந்தார். அவர் தமிழ் மொழியைக் கற்று ... இன்ற பெரும் பயனை யுணர்ந்தவராயிருந்தார். அவ்வேதுவால் அவர் பொருள் மறைந்து கிடப்பச் சொற்கள் நன்கு விளங்கத் தமிழ்ப் பாக்களைப்பாடி, அவற்றுடன் தமிழ்நாட்டு மூவேந்தரிடஞ் சென்று அவர்கள் மகிழுமாறு அவற்றுக்குப் பொருள் சொல்லி அவர்களிடம் பெறுகின்ற நிதிகொண்டு சிவாலயங்களை யமைப்பித்தும் சிவனடியாருக்கு வேண்டியவாறு திரவியங் கொடுத்தும் வருவாராயினர். இவ்வாறு திருத்தொண்டு செய்து சிவபிரான் எழுந்தருளி யிருக்குந் திருக்கைலாசமலையை மறவா மனத்தராய் வாழ்ந்தார்.

அங்கவர்தா மகிழும்வகை
யடுத்தவுரை நயமாக்கிக்
கொங்கலர்தார் மன்னவர்பாற்
பெற்றநிதிக் குவைகொண்டு
வெங்கணரா வொடுகிடந்து
விளங்குமிளம்பிறைச்
சென்னிச்
சங்கரனு ரினிதமருந்
தானங்கள் பலசமைத்தார்

திருக்கைலாச மலையை மறவாத மனத்தராய் வாழ்ந்து தமது கீர்த்தியை யெங்கும் பரவி நிலைக்கச் செய்து சிவபிரானது திருவருளைப் பெற்று அவரது மனக் திருக்கைலாச மலையை மறவாத தொடர்புற்றிருந்தாற் போலத் தேகத் தொடர்பும் உறவாராய்த் திருக்கைலாச மலையை யடைந்தார்.

ஏய்ந்தகடல் சூழுலகி
லெங்குந்த மிசைநிறுத்தி
யாய்ந்தவுணர் விடையறு
வன்பினரா யணிகங்கை
தோய்ந்தநெடுஞ்சடையார்த
மருளபெற்றதொடர்பினுல்
வாய்ந்தமனம் போலுடம்பும்
வடகயிலை மலைசேர்ந்தார்

சிவபிரான் திருவடியை மறவாது சிவபிரான்மீதும் சிவனடியார்மீதும் பொருந்திய

தொடர்ச்சி 2-ம் பக்கம்

---

அரசியல் அலை

## கிராம முன்னேற்ற-இயக்க ஆட்டக் காவடி!

### செடில்பிடிக்கும் அரசாங்கப்பகுதி

உள்ளவருக்கு உதவி! இல்லாதவருக்கு ஏமாற்றம்!!

சமூக சம விருத்தியைக் குறிக்கோளாகக் கொண்டதெங்கள் அரசாங்கம் என்று இலங்கை அரசாங்கமும் சொல்லிக்கொள்கின்றது. அதற்கு அத்தாட்சியாகக் கோடிக் கணக்கான ரூபாவைக் கிராம முன்னேற்றச் சங்கங்கள் சனசமூகநிலையங்கள் என்னும் வாய்க்கால் வழியாக அரசாங்கம் வாரி இறைத்து வருகின்றது! இவை எங்குதான் போய்ச் செறிகின்றனவோ?.... .... .... ....

எங்கள் உள்நாட்டு மந்திரியார் பணஞ் செலவு செய்யப் பயப்படமாட்டார். அதுவும் அரசாங்க பணமென்ருல் ஊராவிட்டில் நெய் போலத் தாராளமாக வூற்றிக் கொடுப்பர். கிராம முன்னேற்ற இயக்கம் அவரது மந்திராலோசனைப் படியே நடைபெறுகின்றது.

சமூக விருத்திக்கு இக்கிராம முன்னேற்ற இயக்கம் எவ்வாறு உதவுகின்றது? முன்னேற்றச் சங்கங்கள் அரசாங்கப் பகுதியாரால் அங்கீகரிக்கப்படவேண்டுமாம். அரசாங்க உத்தியோகத்தர்கள் கயிறு பிடிக்கச் சங்கக் காவடி ஆடவேண்டுமாம் ... துண்டுக் காணி. காணிக்குள்ளே கிணறு இல்லை. அயலாரின் கிணற்றில்தான் அவர் பாவிக்கவேண்டிய நிர்ப்பந்தம். அயலார் மனமிரங்காவிட்டால் நீருக்கலையவேண்டியதுதான். சங்கக் கூட்டங்களைக் கவனித்தார். மேடையில்நின்று காரியம் விளங்கினவர்கள் 'கிணறு தோண்டப் பணம் தருவோம், வீடுகட்ட உதவி செய்வோம், அது கொடுப்போம், இது முடிப்போம். எல்லாம் எங்கள் அரசாங்கத்தின் தரும சிந்தை' என்று பேசுவதைக் கேட்டார் ஒரு விண்ணப்பம் அனுப்பினுர் பண உதவிக்கு.

இன்னேருக்கத்தவர் வாழ்க்கையைத் தன் முயற்சியால் ...

தொடர்ச்சி 2-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரனாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.


# இந்துசாதனம்

யாழ். கர ஹூ மாசி மீ ௧0 ௨ வெள்ளிக்கிழமை


## ஆலயத் திட்டத்தில் மந்திரிக்கதிகாரம் வேண்டுமா?

காற்றடித்தோய்ந்து விட்டது. கட்சி விவாதங்கள் ஒருவாறு நின்றுவிட்டன. அமைதியான அமைப்பில் ஆலய பரிபாலனச் சட்டத்தை ஆராயக் கூடியதாயிருக்கின்றது.

சட்டம் பெரும்பான்மை சர்வசம்மதமாக வரவேற்கப்படுகின்றது. எனினும் சட்டதிட்டத்திலுள்ள பல வேறு அம்சங்களையும் அடிப்படையான கொள்கைகளையும் புநராலோசித்து வேண்டிய திருத்தங்களை ஆக்கவேண்டும் என்பது பலரபிப்பிராயம்.

இச்சட்டம் சைவர்களுக்கேயாமாகையால் அரசாங்க மந்திரியாரின் ஆதிக்கம் கூடாதெனப் பலமாகப் பலரும் எடுத்துரைத்திருக்கின்றார்கள். மந்திரிசபை சாதிசமயக் கொள்கைப்படி அமைக்கப்படுவதொன்றல்ல. அதிலும் ஆலயபரிபாலன அலுவல்களை நடத்தும் உள்நாட்டு மந்திரி எச்சமயத்தைச் சேர்ந்தவராயிருப்பர் என்று எதிர்பார்க்க முடியுமா? சைவரல்லாதவராயிருக்கலாம்; கிறீச்சுரவாதியாயிருக்கலாம். ஆகவே எத்தன்மையர், எக்கொள்கையினர் எச்சமயத்தவர் என்று ஆராய்ந்து குறிப்பிட்ட ஒருவரை உள்நாட்டு மந்திரியாக நியமிக்க அரசியல் ஒழுங்குகள் இடந்தரா. எனவே ஆலயச்சட்ட அலுவலில் மந்தியாரின் பொறுப்பை எடுத்து விடுவதுவே பொருத்தமானதாகும்.

இச்சட்டதிட்டப்படி நியமிக்கப்பட வேண்டிய காரியாதிகாரியின் தத்துவங்களையும் அவரின் நியமன ஒழுங்கைப்பற்றியும் சில திருத்தங்களுக் கிடமுண்டென்று பலர் நினைக்கின்றார்கள். காரியாதிகாரியின் தீர்ப்பைப் புநராலோசிக்கப் பெரிய நீதிநிலையத்துக்கே (District Court) யுரிமையுண்டென்பது முற்றிலும் அகற்றப்பட வேண்டியதற்குப்பலகாரணங்கள் உண்டு. ஆலயங்களைப் பற்றியோ தருமநிலையங்களைப் பற்றியோ எழும் வியாச்சியங்கள் உயர்தர நீதி மன்றத்தின் புநராலோசனைக் குரியனவாயிருக்க வேண்டும் என்பது, இவ்வியாச்சியங்களின் பெறுமதி நோக்கிப் பொதுச் சட்டத்தின்படி உயர்தர நீதிமன்றத்துக்கே உரியனவாகுமென்பதாற் பெறப்படும். தரும கர்த்தாக்களை நியமிக்கும் முறையில் ஆலயங்களுக்குரியவர்களுக்கே தெரிவுரிமையிருக்க வேண்டுமென்பது நல்லதோர் கொள்கை. எனினும் ஆலயங்களுக் குரியவர்கள் யார் என்பதை ஆராய்ந்து வரையறை செய்வது சுலபமானதொன்றலல. நித்தியம் ஆலயதரிசனஞ் செய்பவர்களா? ஒரு குறித்த காலத்திற் றரிசனஞ் செய்பவர்களா? அன்றி ஆலய பூசைக்குப் போதிய பண உதவி செய்துவிட்டு ஒருபொழுதும் ஆலயத்தை அணுகாதவர்களா? அல்லது பிரத்தியேகவிழாக்களைப் பொருட்செலவிட்டு நடத்துபவர்களா? பொதுவாக ஆலயங்களில் வழிபடுவோர் அட்டவணை எங்கேனும் கிடையாது. அவ்வாறொன்றை ஆக்குவது யாரால் என்ற வினவும் எழுமபுகின்றது. ஆகவே ஆலயங்கள் தோறும் ஆலய பரிபாலன சபைகள் தோன்றவேண்டிய அவசியம் புலனாகின்றது. அச் சபைகள் 'வழிபடுவோர்' என்ற பதத்தைச் செவ்வனே ஆராய்ந்து வரையறுத்து இலக்கணங் கூறவேண்டியதும் அவசியமாகின்றது.

எனவே தரும கர்த்தாக்களை நியமனஞ் செய்யும் முறை திருத்தியே ஆகவேண்டும். கட்சிப்பற்றற்ற மந்திரிமாரைக் காண்பதரிதான சனநாயக ஆட்சி முறையில் ஆலய பரிபாலனம் மந்திரியாரிடம் இருக்கவொண்ணாது! ஆசிரிய வசனங்களாகத் திருத்தங்களை எல்லாம் பகுத்துச் சொல்வது இயலாதாகலின் அடுத்த இதழிலும் இச்சட்டத்திற்காக வேண்டிய திருத்தங்களைத் தொகுத்துக்கூற எண்ணியுள்ளோம்.

தொடர்கதை

# இன்பத்தின் நிலை இதுதானா?

'இறை ஒளி'

10

வேகமாய் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் இரதத்தி லொன்றிற் காற்றுத் திடீரென அகன்றதாற் பேரொலிகேட்பதும் இரதம் ஓடாதநிற்றலும் போன்று குமாரன் ஆசிரியரின் நாடக இரதம் நின்றுவிட்டது. இரதத்திலுள்ளவர்கள் என்னவென்றறியாது திகைத்து நிற்பதுபோன்று பகவதியின் அதிர்வேட்டின் அதிர்ச்சியினால் நடிகைகள் செய்வ தின்னதென்றறியாது நின்றனர். "மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந் தம் தகுதியான் வென்றுவிடல்" என்றுணர்ந்து குமாரன் ஆசிரியர் பொறையுடைமை நன்றென உணர்ந்து உள்ளத்தை ஒருப்படுத்தி 'விகடப் பேச்சும் வேண்டியதுதான்!" என்று கூறிக்கொண்டு பகவதியின் நாடகஉணர்ச்சியை மெச்சுவார் போன்று பகவதிக்குத் தோழிப்பெண் நடிப்புடன் வேறொரு விகடத்தனுக்கு நடிப்பையும் கொடுத்து இந்த நாடகத்தைச் சிறிது பெருக்குதல் நன்று என்று சொன்னார். பாய்ந்த புலி பின் பதுங்காது என்றபடி பகவதி நிலை மாறாது நின்றாள். நின்றதோடமையாதவளாய் விகட நடிப்பல்லக் கபட நடிப்புத்தான் வேண்டியதாயிருக்கிறது என்று புண்ணிற் புளிபெய்தாங்கு மறுபடியும் ஆசிரியரினதும் பங்கஜத்தினதும் நெஞ்சைப் பிளக்குங் கடுஞ்சொற் சொன்னாள், ஆசிரியருக்கொரு வழியுந் தோன்றவில்லை. இரண்டு வாரம் விடுமுறை விடுவதாயும் விடுமுறையின் பின்னரே நாடகம் ஒழுங்கு பார்க்கவேண்டுமென்றும் கூறிமுடித்தார்.

### பெண்ணினத்துக்குப் பகை பெண்ணினமே!

இச் சூது வெளிப்படையாயிருந்தும் பகவதி உடனே ஒன்றும் செய்துகொள்ள முடியாதவளாய் வீடுதிரும்பினள். பங்கஜத்திற்கு வீட்டிலிருந்து மோட்டார் இரதம் வர நேரமெடுத்தது. கல்லூரியில் குமாரன் ஆசிரியரும் பங்கஜமும் பணியாளருமேயிருந்தனர். வேடன் வலை தப்பிய மான்போல் நிம்மதியற்றுப் பேச்சற்று நின்ற பங்கஜத்தைக் குமாரன் ஆசிரியர் நோக்கி, இதற்கெல்லாம் இதயத்தை இழந்துவிடுவதா? பெண்ணினத்திற்குப் பெண்ணினமே பேரிடர் விளைவிப்பது! உன் அழகை, உன் எழிலை உன் இன்ப மழலையை, உன் தேனனைய நித்நப்பான காணமிர்தத்தைக் கண்டு பொறாதாளாய்ப் பகவதி இவ்வாறெல்லாம் சேவி செய்துவிட்டாள். கருத்தொருமித்த காதலர் பகுதியைக் கருத்தழிந்து நடித்துவரும் வேளையிற் கெடுத்துவிட்டாளே. உண்மையில் என்னை நான் மறந்தேவிட்டேன். உயர்தர நடிகர்கள் மெய்மறந்து நடித்துவருவதென்றதை இன்றுதான் பொய்யல்லவென உணர்ந்தேன். அதுமாத்திரமா கதையிலுள்ள கதாநாயகியிற் கதாநாயகன் கருத்து வைத்ததுபோற் கதாநாயகியாகிய உன்மேற் கதாநாயகனாகிய என் கருத்துப் பதிந்துவிட்டதே! இக் கருத்து என் உயிர் உள்ளளவும் மாறாது என்று மாலை ஞாயிற்றைப் பார்த்து நான் சத்தியஞ் செய்கின்றேன். இதோபார் என்றார்.

"காதலாற் கலக்கு!"

என்றதும் உள்ளத் தெழுந்த உணர்ச்சியை ஒரு வழியாலும் மேற்கொள்ள விடாது தடுக்கப் பங்கஜம் பன்முறை முயன்றும் முடியாதாளாய் ஆசிரியரைப் பார்த்தாள். கண்கள் கலந்தன, கண்கள் கலங்கின. பெண் பேதையென்றது பொய் என்று தன் பேச்சை ஆரம்பித்தாள் பங்கஜம். நீங்கள் என்ன சாரியஞ் செய்தீர்கள். என் சத்தியஞ் செய்தீர்கள். கல்லூரியிற் கற்க வந்தவர்கள் கற்று முடிந்ததும் கலைந்து விடுவார்களே! அவர்களில் எவர் ஒருவரிலாவது கருத்தழிவதும், அதனைச் சத்திய விரதமாகக் கொள்வதும் நன்றா? நான் இக் கல்லூரியிற் சங்கீதம் கற்க வருவதற்கே என் தந்தையாருடன் சொற்போர் நடத்தியே வரவேண்டியிருந்தது. தந்தையாரோ வாகட முறைப்படி நடப்பவர். கட்டுப்படிப்புடையவர். இலக்கணவரம்பு கடவாதவர். வெளியுலகம் உண்டென்று கனவிலும் எண்ணாதவர். பெண் இனம் பேதையினம் என்றும் எண்ணுஞ் சத்தியும் எண்ணியபடி இயங்குஞ் சத்தியுமற்றவர்கள் என்ற கொள்கையுடையவர். இல்லாதிருந்தும் நான் என் மனக்காவலுடன் இங்கு வந்தேன். இயற்கை என்னும் மின்சாரம் இழுத்துவிட்டது போல் ஆசிரியருடன் நடிக்கத் துணிந்தேன். அவரை நாயகனாகப் பாவனை செய்யவும் ஒப்புக்கொண்டேன். பாவனை படியப்படியச் சுபாவமாய் விட்டதை இப்போ அறிகின்றேன். இந் நிலைமைதான் - என்ன - என்னை மறந்த நிலை. இன்பத்தின் நிலை இதுதானா? அன்பெனும் இளம் பிறை தோன்றுவதுபோலிருக்கின்றது, என் உள்ளம் கற்பனைசெய்து துள்ளி விளையாடுகின்றது. ஆனாற் பிறையின் பிரபையை மறைக்கும் முகிற் கூட்டம் தெரிகின்றதே. அது என்ன? அப்படிச் சொல்கின்றாயே என்று குமாரன் ஆச்சரியத்தோடு வினவச் சொல்லுவாள் பங்கஜம். — (தொடரும்.)

## அரசியல் அலை

1-ம் பக்கத் தொடர்ச்சி

நன்கு நடத்துபவர், ஒரு குறையுமில்லை. ஒரு புது வீடு கட்ட ஆரம்பித்திருக்கின்றார். கிணறு தோண்டவேண்டும். சங்கத்துக்குப் பண உதவி கோரி விண்ணப்பஞ் செய்தார்.

இந்த விண்ணப்பங்களை வெருட்டும் சங்க விதிகள் உண்டு. தானுகமுயற்சிசெய்து அரசினரின் உதவியைக் கேட்பவர்களுக்குப் பண உதவி. அவர்கள் பணமில்லை எவ்வாறாயினும் காரியமில்லை.

ஏழை இருந்தபடி இருக்க வேண்டியது. உள்ளவருக்கு உள்ளதோடு ஒருபடி கூட உதவி! கிராம முன்னேற்றம் – சமூக சம விருத்தி!!

இதுதானா சமூக முன்னேற்றக்கொள்கை? அரசாங்கமே இவ்வாறென்றால் சமசமாஜிகள் பொதுவுடைமையினர் மாசனங்களைக் கைப்பற்றுதல் நூதனமாகுமோ?

---

உலக சுகாதார நிலையவைத்தியர் ஹஸ்பெல்ட்ற கல்கத்தாவில் இருதயநோய்க்குச் சத்திரவைத்தியஞ் செய்ய [illegible] பின் இல்லம் திருத்துகிறதாம்.

## தமிழ்க் கோவை
## தொகுத்தமைத்த நாயனர்

முதலாம்பக்கத் தொடர்ச்சி

போன்பே வாழ்க்கையின் சிறந்த பண்பாடாயமைத் தமையும், அதனால் திருவருட் பேறு பெற்றமையும் இங்கே தெரிக்கப்பெறறன.

"காண்பவன் சிவனேயானல்
அவனடிக் கன்புசெய்கை
மாண்பறம் அரனறன்பாதம்
மறந்துசெய் அறங்களெல்லாம்
வீண்செய லிறைவன் சொன்ன
விதியறம்விருப்பொன்றில்லான்
பூண்டனன், வேண்டல்செய்யும்
பூசனை புரிந்துகொள்ளே"

— (சி சி)

## வள்ளுவர் திருநாள்

நிகழும் கர வருடம் மாசி மாதம் 3-ந் திகதி (15-2-52) உத்தர நட்சத்திரத்தோடு கூடிய சுக்கிரவார தினத்தன்று பிற்பகல் 2 மணியளவில் திருவாளர் இ. முருகேச ஆசிரியர் அவர்கள் தலைமையில் அளவெட்டி சதானந்த வித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி தினம் கொண்டாடப்பட்டது. அத்தருணம் ஏழாலை பண்டிதர் திரு. ச. பொன்னுத்துரை ஆசிரியர் அவர்களால், திருவள்ளுவரும் குறளும் என்னும் விடயம் பற்றிச் சொற்பொழிவாற்றப் பட்டது.

## செய்தித் திரட்டு
=0=

சர்வகலாசாலை மாணவர் சங்கத் தேர்தல முறை அரசியல்வாதிகளின் அரசாங்க தேர்தல் முறையைப் பின்பற்றி மதுபானம் முதலியன வழங்கும் மாண்புடையதாயிருக்கின்றதாம்! மன்னனெவ்வழி மன்னுயிரவ்வழி!

X X X

இலங்கையின் ஒவ்வொரு பட்டினத்திலும இராப்பாடசாலை அமைக்க அரசாங்கம் யோசிக்கின்றது. பதினன்கு [illegible]க்கு மேற்பட்டவர்கள் [illegible]பாடசாலைகளிற் கல்வி பயி[illegible]ர்.

X X X

[illegible]லொக்கணித்தாக வுள்ள ஓர் [illegible]லருகில் 4 அடி நீளமுள்ள பு[illegible]யொன்றை, 25 யார தூரத்தில் நின்று வீமன்காமம் ஆங்கில பாடசாலை ஆசிரியர் திரு. அரசரத்தினம் சுட்டுக் கொன்றார்.

X X X

சாதிபேதச் சட்டத்துக்கு மாறாய்ச் சாத்வீகப்போர் 6-4-52ல் தொடுக்கப்படுமெனத் தென்ஆபிரிக்க பிரதம மந்திரிக்குத் தென்ஆபிரிக்க மக்கள் தெரிவித்திருக்கின்றார்களாம்!

X X X

நாட்டின் பனங்கட்டிச் செய்கையை வளர்க்கத் தீர்மானித்து வல்லுவெட்டித்துறையிற் பனங்கட்டி மத்திய நிலையமொன்றை அரசாங்கம் ஆரம்பித்திருக்கின்றது. இன்னும்பல நிலையங்கள் திறக்கப்படுமாம்!

X X X

பொருத்தமான ஆங்கிலச் சுருக்கெழுத்துக்களை உபயோகித்துத் தந்திகள் சிலகள தமிழ்மொழிகளிலேயே யந்திரங்களில் அனுப்பத் தந்திப்பகுதியார் பழகுகின்றார்களாம்! இதனாற் சிங்கள தமிழ் உத்தியோகஸ்தர் மாற்றங்களும் தேவைக்குத் தகுந்தபடி உண்டாகுமோ?


## உழைப்பதற்கு வழி!

மாதம் ரூபா 100 தொடக்கம் 300 வரையில் மூலதனமின்றி ஓய்வு நேரங்களில் உழைக்க ஒரு வழியுண்டு. இதுபற்றிய விபரங்களை இவ்விலாசத்திற் கெழுதி அறிக. விபரங்கள் இலவசம்.

**Girson Knitting Works**
**Ludhiana 9**


## தமிழர் மகாநாட்டுக் கிளை நிலையம்

சென்ற ஞாயிற்றுக்கிழமை (17-2-52) மீசாலை வடக்கு வீரசிங்கம் வித்தியாசாலை மண்டபத்தில் தமிழர் மகாநாட்டுக் கிளைநிலையம ஒன்று நிறுவும் பொருட்டு ஓர் ஆரம்பக் கூட்டம் நடந்தது.

தமிழ் மக்களை மேல்நிலையடையச் செய்தலே தமிழர் மகாநாட்டார் கொள்கை யென்றும், இப்பொழுது ஒன்பது கிளை நிலையங்கள் நிறுவப்பட்டிருக்கின்றனவென்றும் இருபத்தைந்து கிளை நிலையங்களை நிறுவுதல் தங்கள் நோக்கமென்றும், சாவகச்சேரிப் பிரதிநிதி திரு. குமாரசாமி அக்கூட்டத்திற் பேசுகையிற் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேயர்கள் நெஞ்சம்

## ஆசிரிய அன்ப!

### மதமாற்றமல்ல!

15-2-52ல் வெளிவந்த தங்கள் இந்துசாதனப் பத்திரிகையில் திரு. மூ. மயில்வாகனம் என்பவர் "மதமாற்றம்" என்னும் தலைப்பெயருடன் எழுதிய கடிதத்தை வாசித்தேன். இவர் எங்கிருந்தோ பெற்றுக்கொண்ட பிழையான தகவலின்பேரில் "நல்லூர் ஆசிரிய கலாசாலை"யைப்பற்றி நடவாத ஒரு சம்பவத்தை நடந்ததாக எழுதியதால் உண்மையை விளக்க வேண்டியது என் கடமையாகும்.

மாணவர் ஆசிரிய கலாசாலைக்கு விண்ணப்பம் அனுப்பும் போது கிறீஸ்தவர்கள் தங்களைக் கிறீஸ்தவர்கள் என்றும் சைவர்கள் தங்களைச் சைவர்களென்றும் போட்டே அனுப்ப வேண்டியது. ஆனால் சில பிள்ளைகள் தாங்கள் நிச்சயமாகச் சேரலாம் என்ற நம்பிக்கையில் கிறீஸ்தவர்கள் என்று போட்டனுப்புவதற்கு அரசாங்கமாவது ஆசிரிய கலாசாலையாவது பொறுப்பல்ல. அன்பர் கூறுவதுபோல இவ்வருடம் 42 பிள்ளைகளின் பெயர் வந்தது. இதில் 29 மாணவரையே தெரிந்து சேர்க்கும்படி வித்தியா பகுதியாரின் உத்தரவுடன் உதவி வித்தியாதிபதியைத் தலைமையாகக் கொண்டு நடந்த நேர்முகப் பரீட்சையில் 29 பேரையே தெரிவு செய்தனர். இந்தத் தெரிவு செய்யப்பட்ட 29 பேரும் பிறப்புக் கிறீஸ்தவர்களும் ஏற்கனவே ஞானஸ்நானம் பெற்ற கிறீஸ்தவர்களுமாவர். எடுபடாமல் தள்ளப்பட்ட 13 பேரில் இரண்டொரு கிறீஸ்தவர்களும் பலர் ஞானஸ்நானம் எடாமல் தங்களைக் கிறீஸ்தவர்களென்று சொல்லிக்கொண்ட சைவப் பிள்ளைகளுமாவர். 42 பேரும் அறிவிக்கப்பட்ட பின் சில சைவப் பிள்ளைகள் ஞானஸ்நானம் எடுப்பதற்கு அந்தரப்பட்டனர். இதனை ஆசிரிய கலாசாலை அதிபரும் சில குருமாரும் வன்மையாக எதிர்த்ததை நான் அறிவேன். இது 'வேலிக்கோணான் சாட்சி'யல்ல உண்மை. ஆகவே அன்பர் எழுதியமை பொய்த் தகவல் என்றும், நல்லூர் ஆசிரியகலாசாலையில் எவ்வித மதமாற்றமும் நடைபெறவில்லை யென்றும் திட்டவட்டமாய் தெளிவாய் பகிரங்கமாய்க் கூறுகின்றேன். சைவர்கள் சைவத்தை வளர்ப்பதும் கிறிஸ்தவர்கள் கிறிஸ்த சமயத்தை வளர்ப்பதும ஜனநாயக உலகிலே பிழையல்ல. ஆனால் பொய்த் தகவல்களின் பெயரில ஒருவரையொருவர் அருவருப்பது நல்லதல்ல.

இங்ஙனம்
யே. ந. பொன்னையா
சாதனபாடசாலை
நல்லூர்

●

### ஓர் ஐயவினு

கந்தபுராணம் யுத்த காண்டம் இரணியன் புலம்புறு படலத்தில்,

"புக்க கனகன் புலர்ந்தது
புகரோன்பால்
அக்கணமே யெய்தி யழிவுற்ற
தந்தையர்க்குந்
தக்க துணைவர்க்குந் தாயர்க்கு
மேனையர்க்கும்
மிக்க கடன்கள் விதிமுறையே
செய்தனனே"

என்ற செய்யுளில் "அழிவுற்ற தந்தையர்க்கும்" என்ற பகுதியின் பொருள் யாது? "தந்தையர்" என்ற பலர்பால் யார்யாரைக் குறிக்கும்? இரணியன் தன் தந்தையாராகிய சூரனுக்குக் "கடமை" செய்தவனு இல்லையா? செய்தான் என்றால் அதே படலத்தில்

"மாறற் றிடாத்தொல்
வடிவந் தனையிழந்து
வேறற்ற புன்வடிவாய்
மேவினு யாங்கதனுல்
ஈறுற்றனை யன்றே
யென்செய்கை செய்வதற்
பேறற்றிலனை வானர [ருப்
பேணினே னிவ்வுயிரே"

என இரணியன் முதலிற் புலம்பிய கூற்றிற்கு முரண்படாதா? கடமை செய்டவில்லை யெனில் "தந்தையர்" என்று பலர்பாலாற் கூறிய கருத்தென்னவோ?

—ஒரு கல்லூரி மாணவன்

●

### புங்குடுதீவு வேலணைத் தாம்போதி

புங்குடுதீவுக்கும் வேலணைக் குமிடையேயுள்ள தாம்போதி யமைப்பு 1936-ம் ஆண்டு தொடங்கப்பட்டு இடையிடையே சிறிது சிறிது செய்யப் படுகின்றது. 16 வருடங்களாகியும் இது நிறைவேற்றப்படும் போக் காணப்படவில்லை. ஒப்பந்தகாரர்முதலிய யாராயினும் இதைப்பற்றிச் சிரத்தையெடுப்பதாயில்லை. இதனால் இந்தப் பகுதி மக்கள் அனுபவிக்கும் கஷ்டம் அளவிடமுடியாது. எங்கள் பிரதிநிதியாகுதல் இனி இதைப்பற்றிக் கவனிக்க வேண்டும்.

புங்கையூரன்
புங்குடுதீவு 19-2-52.

### ஞானசாரிய கல்லூரியினர் சுற்றுப்பிரயாணம்

கட்டைவேலி மத்திய ஞானசாரிய ஆங்கிலக் கல்லூரி ஆசிரியர்களும் ஆசிரியைகளும் மாணவர்களும் மாணவிகளுமாக இருபதுபேர் புராதன சரித்திர பூமிசாஸ்திர சம்பந்தமான விஷயங்களை நேரிற் பார்த்து அறிவதற்காக 21-2-52 வியாழக்கிழமை பிற்பகல் புறப்பட்டு அன்றிரவு அனுராதபுரத்தில் தங்குவர். அனுராதபுரம் வெள்ளரசமரக் கோவில் முதலிய இடங்களைப் பார்வையிட்டு 22ந் திகதி வெள்ளிக்கிழமை காலை புத்தளம் வழியாகச் சிலாபம் முன்னேஸ்வரநாதன் கோயிலை மத்தியானம் அடைவர். பின்பு நீர்கொழும்பு கந்தானை முதலிய இடங்களைப் பார்வையிட்டு கொழும்பையடைந்து கொழும்பு நூதனசாலை தெகிவலை மிருகக்காட்சி கொழும்புத் திட்டக்காட்சி முதலியவற்றைப் பார்ப்பார்கள். 27ந் திகதி புதன்கிழமை உனுப்பிட்டியி லிருந்து புறப்பட்டு கண்டி கட்டுக்கலையை யடைந்து தலதா மாளிகை, பேராதனைத் தோட்டம், சர்வகலாசாலை முதலிய இடங்களைப் பார்த்தபின் மாத்தளைக்குச் செலவர். 29-2-52 வெள்ளிக்கிழமை காலையில் தாலக்தடம்புலா முதலிய இடங்களைப் பார்வையிட்டு 4 மணிக்கு அனுராதபுரத்தை யடைந்து அங்கிருந்து 7 மணிக்குக் [illegible] குப் புறப்படுவார்கள்.

### செழுஞ்சுடராகித் திகழ்ந்த திருநாள்

1-ம் பக்கத் தொடர்ச்சி

"அவனன்றி யோரணுவு மசையா
தெனும்பெரிய ஆப்தர்மொழி
யொன்றுகண்டால்
அறிவாவதே து சில அறியாமை
யேதிவை யறிந்தார்களறி
யார்கள் யார்
மௌனமொ டிருக்கதாரென்
போலுடம்பெலாம் வாயாய்ப்
பிதற்றுமவரார்
மனதெனவு மொருமாயை
யெங்கே யிருந்துவரும்வன்மை
யொடிரக்க மெங்கே
புவனம் படைப்பதென் கர்த்தவிய
மெவ்விடம் பூதபேதக
ளெவிடம்
பொய்மெய்த மகிதமே
வருநன்மை தீமையொடுபொ
றைபொறுமை யுமெவ்விடம்
எவர்சிறிய ரெவர்பெரிய ரெவ
ருறவ ரெவர்பகைஞர் யாது
முனையன்றி யுண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக்
குயிராகி யெங்குநி
றைகின்ற பொருளே!'

என்று துதித்துப் பாடியருளினர். இஃதிவ்வாறிருக்கவும் இவ்வுலகின்கண் பெரிதோ சிறிதோ அரசாங்கத்திலோ அன்றியோ அதிகார பதவியைப் பெற்றதும் அகங்கார மேலீட்டினுல் அரனடியை மறந்து அறிவிழந்து அல்லற் கடலுட் புகுந்தழுந்துகின்றே மென்பதைக் கண்டிரங்கியே,

"முடிசார்ந்த மன்னரு மற்று
முள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்
ணுவதுங் கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்ப
தலாற் பொன்னினம்பலவ
ரடிசார்ந்து நாமுய்யவேணு
மென்றே யறிவாரில்லையே!"

என்று புலம்புவார் போன்ற பாடியருளினர் பட்டினத்தடிகள். மானிட யாக்கை பெற்று மதிவிளங்கப்பெற்ற நாம் இந்தப் புண்ணிய தினந்தரும் பெரும் பேற்றைப் பெற முந்தாது வாளாவிருப்போமா? "அரன் கோயில் வலம் வந்து பூக்கையால அட்டிப் போற்றி" என்னுதிருப்போமா?

தவமுந் தவமுடையார்க் காகலின் தவமுடையாரெல்லோருந் தவஞ் செய்ய முந்துவரே.

"மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்
து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
ஈசற் காட்செய்மின்
குழாம் புகுந்து
அண்டங்கடந்த பொருள் அளவி
ல்லதோர் ஆனந்த வெள்
ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும்
உள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதமே".

### இந்தியருக்கு வாக்குரிமை

இலங்கைவாழ் இந்திய மக்களனைவருக்கும் அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் வாக்குரிமை கொடுக்கவேண்டுமென்று சென்ற நகரசபைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் நகரசபை தீர்மானித்திருக்கின்றது.

இத்தகைய ஓர் தீர்மானத்தைச் செய்வதற்கு ஓர் நகரசபைக்கு அதிகாரமுண்டா என்னும் ஐயமின்று முறையானதே யெனினும் யாழ்ப்பாண மக்களின் விருப்பம இதுவென்பதைக் கட்சிப் பேதமின்றி எடுத்துக்காட்டியது பலருக்கு மகிழ்ச்சியை விளைவிக்கின்றது.

### மகா சிவராத்திரி தினம்

#### திருக்கேதீச்சரத்தில்

மகா சிவராத்திரி தினம் நிகழும் கர வருஷ மாசி மீ 11-ந் தேதி (23-2-52) சனிக்கிழமை யன்று திருக்கேதீச்சர ஆலயத்தில் கொண்டாடப்பெறும் அன்றைய தினம் மாலை 6 மணி தொடக்கம் மறுநாட் காலை 5 மணி வரையும் சமயச் சொற்பொழிவு, புராணபடனம், தோத்திர பாராயணம் ஆதியன நிகழும். நித்திய பூசைகளோடு அனறிரவு முழுதும் விசேட பூசைகள் நிகழும்.

திருக்கேதீச்சர நாதர் தீர்த்தத்தின் பொருட்டு ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குப் பாலாவிக்கு எழுந்தருளுவர். அதன் பின் மாகேசுரர்களுக்கு அன்னதானம் நிகழும்.

யாத்திரீகர்களின் வசதிக்காக மன்னார்ப் புகைரத ஸ்தானத்திலிருந்து திருக்கேதீச்சரத்துக்கும், பின திருக்கேதீச்சரத்திலிருந்து மன்னாருக்கும் பஸ் வண்டிகள் செல்லும். (22-2-52) வெள்ளிக்கிழமை யன்றும் (23.2-52) சனிக்கிழமை யன்றும் மன்னாரை அடையும் புகைரதங்க ளெல்லாவற்றிலும், வரும் பிரயாணிகளை எதிர்பார்த்து பஸ் வண்டிகள் நிற்கும்.

●

#### செல்வச்சந்நிதியில்

சிவராத்திரி இரவு 10 மணியளவில் சிவராத்திரி மகிமை போதனை செய்யப்பெறும் என்றும் அன்று பிற்பகல் 3-30 மணியளவில் அரசினர் சட்டம் சைவத்தை அழிக்குமென்று பிரமஸ்ரீ ஐ. முத்துச்சாமிக் குருக்கள் முதலியோர் பேசுவரென்றும் ஆலயகர்த்தருளொருவர் திரு. கா. முத்துக்குமாருஐயர் தெரிவிக்கின்றார்.

## உங்கள் நக்ஷத்திரம்?

ஸ்ரீ ராதா கிருஷ்ணன் கணிப்பது.

எங்கள் சோதிடம்

### இவ்வாரப் பலன்கள் 17—2—52——23—2—52

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

இந்த வாரம் பெருஞ் செலவு செய்யவேண்டி வரும. வியாபாரத் துறைகள் நன்மையாயிருக்கும் சிநேகிதராலும் இனத்தவராலும் இலாபத்துக்கும் உதவிக்குமிடமுண்டு. வார இறுதியில் சொந்த முயற்சிகள் நன்கு கவனிக்கப்படுதல் நிச்சயம்

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்.

குடும்பக் கஷ்டங்கள் தாமாக நீங்கும். இந்த வாரம் காசு விஷயங்கள் திடமாய் முன்னேறுதல் நிச்சயம். தீமை விளைக்கிறதற்கு மிக முனைந்து நின்ற ஒரு பகைவன் தனது முனைப்பை வார இறுதியிற் கைவிடுவார்.

**மிதுனராசி** மிருகசிரிடம், 3 4, திருவாதிரை, புனர்பூசம 1,2,3.

வாரத்தின் முதல் நாள் கவனமாகக் கழிக்க வேண்டும். வயது முதிர்ந்த இனத்தவர்களோடு வீட்டில் தொந்தரவுக்கிடமுண்டு. ஆனால் இக்கவின்பின் பணத்துறையில் நல்ல காலம். புது முயற்சிகளை முன்னேற்றுக.

**கடகராசி** புனர்பூசம் 4ம்பாதம் பூசம் ஆயிலியம்.

ஞாயிறு பிற்பகல், திங்கள், செவ்வாய் கவனமாய்க் கழிக்க வேண்டும். இடைபூறுகளுக்கு ஆல் [illegible] சென்ற நாட்களிலும் நன்மையாயிருக்கும். ஆனால் மனச்சமாதானமிராது. தேகசுகமும் நல்லாயிராது

**சிங்கராசி** மகம், பூரம், உத்தரம, 1ம் பாதம்.

வீட்டில் விறுவிறுப்பான வாரம். மனைவியுடன் சண்டையும் பிழையான எண்ணங்களும் உண்டாகும். துரித தீர்மானங்களைத் தவிர்க்கவும். செவ்வாயிரவு, புதன வியாழன் மிகக் கூடாத காலம்,

**கன்னிராசி** உத்திரம 2,3,4ம் பாதம அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

இந்த வாரம் உத்தியோக விஷயங்களை மிகக் கூர்மையாகக் கவனிக்கவும். சிறுச்சண்டைகளுக்கிடமுண்டு. தனலாபம் நிச்சயம் ஆனல் நல்லாய் முயற்சிக்க வேண்டும. வெள்ளி சனி கவனமாய்க் கழிக்கவும்.

**துலாம்** சித்திரை 3,4ம் பாதம் சுவாதி விசாகம் 1,2,3ம் பாதம்

இந்த வாரம் தேக சுகவீனம் பெரும் மனச்சலனத்தை யுண்டாக்கும். செலவுமதிகரிக்கும். பங்குத் தொடர்புகளிலும் இனக் கொண்டாட்டத்திலுங் கஷ்டமான காலம்.

**விருச்சிகராசி** விசாகம் 4-ம் பாதம அனுஷம், கேட்டை.

உயர்ந்தோர் அல்லது அதிகாரிகளிடம் உதவி பெறுவதற்கு நல்ல வாரம். வாகனவில் வண்டிகளால் செலவுக்கிடமுண்டு. காணி விஷயங்களில் அல்லது சமூகத்தொடர்புகள் பின்னுக்கு நன்மையாயிருக்கும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

இந்த வாரம் சகோதர சகோதரிகளால லாபமும் உதவியும் நிச்சயம். சொந்த விஷயங்களுக்கும் உற்சாகமான காலம். வார இறுதிக்குமுன் பிழையான எண்ணங்கள் நீங்கி நல்லெண்ணங்களுண்டாகும்.

**மகரராசி** உத்தராடம் 2,3, 4ம் பாதம திருவோணம அவிட்டம் 1, 2ம் பாதம்.

இந்த வாரம் குடும்ப விஷயம் வீட்டு விஷயங்கள் திருத்தியாயிராது. நண்பர் நம்பிக்கைத் துரோகஞ் செய்யக்கூடும். உத்தியோக இடங்களிலும் சில சண்டை சச்சரவுகளுக்கிடமுண்டு.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம, சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

வியாபார விஷயம் அல்லது உத்தியோக விஷயத்தில் தற்காலிக கஷ்டம் ஏறபடக்கூடும். இனத்த முதியோரால் தொந்தரவுக்கிடமுண்டு. சிறிது காலத்துக்குப் புது முயற்சிகளைப் பின்போடுக.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.

பெருஞ்செலவுள்ள வாரம். இனத்தவர் பெருங் கோபத்தை யுண்டாக்குவர். துரிதத்தீர்மானங்களைத் தவிர்க்கவும். வார இறுதியில் நண்பருடன் பிழையான விளக்கங்களுக்கும் சண்டைகளுக்குமிடமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரகடனம்

திருவாதவூரடிகள் புராணம் உரையாசிரியர்: ம. க வேற்பிள்ளை அவர்கள் செய்த பொழிப்புரையுடன் விலை ரூபா 2-00

பிரதோஷவிரதமான்மியம் (புதிய பதிப்பு) சிவவிரதங்களுட் சிறந்ததாகிய இவ்விரத காலத்திற் சுவாமி கும்பிடவேண்டிய ஒழுங்கு, இதனை அநுட்டிக்க வேண்டிய முறை, புத்தி பூர்வமாகவும் அபுத்தி பூர்வமாகவும் அநுட்டித்தோர் பெற்றபேறு முதலியவற்றை இனிய தமிழ் வசன நடையில் விளக்குவது; விலை சதம் 40

வில்லி பாரதம் - புட்ப யாத்திரைச் சருக்கம் பண்டிதர், ம. வே திருஞானசம்பந்தப்பிள்ளை எழுதிய நுண்பொருள்விளக்க விரிவுரை, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன், 1951ம் 52ம் ஆண்டுகளில் நடக்கும் தமிழ்ஆங்கில S. S. C. (எஸ். எஸ். ஸீ.) பரீட்சைகட்குப் பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது, (2-ம் பதிப்பு விலை ரூ. 1—25ச.

அரிச்சந்திர புராணம் - மயானகாண்டம் மேற்படி பண்டிதர் எழுதிய பொழிப்புரை இலக்கணக் குறிப்பு, நூலாசிரியர்வரலாறு முதலியவற்றுடன் உயர்தர வகுப்புகளுக்குச் செய்யுட்பாடமாக விதிக்கப்பெற்றுள்ளது. விலை சதம் 75.

மாணிக்கவாசகசுவாமிகள்சரித்திரம் திருவாசகத்திரட்டுடன் மேற்படி பண்டிதர் எழுதியது; கொழும்பு விவேகாநந்தசபையார் நடத்தும் சைவசமயபாடப்பரீட்சை மேற்பிரிவிற்குப் பாடமாக விதிக்கப்பட்டது. விலை ரூ. 1—20 ச.

உலகம்பலவிதக்கதை I. (கோபாலநேசரத்தினம்) ஷை பண்டிதர் எழுதியது. படிக்கப்படிக்கத் தெவிட்டாதது. விலை ரூ. 1—25ச.

ஈழமண்டல சதகம்: ஆசிரியர் ம. க. வேற்பிள்ளை இயற்றியது; இலங்கையின் மான்மியத்தை எடுத்து விளக்குவது; விரிவுரையுடன் விலை ரூ. 1-00

சைவசமயசாரம்: ஆசிரியர் சு. சிவபாதசுந்தரம் (B. A.) அவர்கள் எழுதியது. கொழும்பு விவேகானந்தசபையார் நடத்தும் சைவசமயப் பரீட்சைப் பாடங்களுளொன்றாயுள்ளது. விலை ச 45.

"ஆறுமுகநாவலர்" (ஆங்கிலத்தில்) சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம் (B. A.) எழுதியது; ஆங்கிலமறிந்தோர் எவரும் படிக்கத்தக்கது. முந்தி வெளிவராதது. விலை 60 சதம் (அணா 10)

புலியூர் (யமக) அந்தாதி மாதகல் மயில்வாகனப்புலவர்இயற்றியது, ஆசிரியர் ம. க. வேற்பிள்ளைசெய்த உரையுடன் விலை சதம் 50.

முற்பணமனுப்புவோர்க்குத் தபாற் செலவின்றிப் புத்தகங்கள் அனுப்பப்படும்.

Apply: to PANDIT V. T, SAMBANDHAN Vannarponnai, anJaff,

## இசைப்பிரியர்களுக்கு ஓர் அருந்தருணம்!

# என்றுங்காணு :: :: இன்னிசை விருந்து

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் (College Quadrangle)

**மாசிமீ 25உ (8-3-52)**

சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு நடைபெறும்

தர்மபுர ஆதின இசைப்புலவரும், சங்கீத சாகித்திய சிரோமணியும், பட்டினத்தார், நந்தனர், மாணிக்கவாசகர், திருமழிசை ஆழ்வார் முதலிய படங்களில் கீர்த்திபெற்றவருமாகிய

இசையரசு

**M. M. தண்டபாணிதேசிகர்** வாய்ப்பாட்டு

: பாங்கான பக்கவாத்தியம் :

| | | |
|---|---|---|
| மதராஸ் | A. கண்ணன் | மிருதங்கம் |
| ,, | T. பாலசுப்பராயலு | வயலின் |
| ,, | C. V. வீருசாமி | கெஞ்சிரா |

சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம நிதிக்காக

## விற்பனவு விளம்பரம்

வடமராட்சி ஐக்கிய மோட்டார் சேவைச் சங்கத்திற்குரிய பின்னுற் காணும் அட்டவணையில் விபரிக்கப்படும் (Bus) பஸ் வண்டியும், (Lorry) லொறியும் வேறுசாமான்களும் 1952-ம் ஆ மாசி மீ 24ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-30 மணிதொடக்கம் மேற்சொல்லிய சங்கக்கந்தோருக்கு எதிராக இருக்கும் கரேச்சில் என்னுல் பிரசித்தலேலத்திலவிற்கப்படும்.

வாங்குபவர்கள் கொள்வனவுப் பணத்தை உடனே கட்டிப் பொருட்களை உடனே எடுத்துக் கொள்ளவேண்டும்.

மேற்சொல்லிய அட்டவணை

1. Ford Bus C. E 6081
2. Ford Lorry C. E. 5617
3. பழைய இரும்புச் சாமான்கள்
4. பழைய ரயர்கள் (Old Tyres)
5. கம்பிக் கட்டைகள்.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை, 14-2 52.
M. 216 22—2—52.

## தேவை

யாழ்ப்பாணம் ஒட்டுமடம்ஐக்கிய பண்டசாலைக்கு 1-4-52ல் இருந்து ஒரு மனேஜரும் ஒரு கிறவைக்காரனும் தேவை. மனேச்சரே கிறவைக்காரனைக் கொண்டுவரவேண்டும். சம்பலம் அவரவர் தகுதிக்குத் தக்கதாகக் கொடுக்கப்படும். மனேச்சரும் கிறவைக்காரனும் மொத்தமாக ரூபா 500/= பிணை கட்டவேண்டும். விரும்புவோர் 19-3-52க்கு முன் விண்ணப்பப் பத்திரம் காரியதரிசிக்கு அனுப்ப வேண்டும்.

ஒட்டுமடம் ஐக்கிய
பண்டகசாலை,
வண்ணார்பண்ணை, 18-2-52.
M. 214 19, 22, 26—2—52.

## யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர்மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**134,3670**

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை,

மாசமொன்று 1ரூபா விகிதமாக 75 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமு வாங்கலாம்.

**தினசரிப்பற்றுவரவு.**

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.**

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்.**

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்.**

நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 12 விகிதம் அறவிடப்படும். (ஈடு வைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

Std. 14 20-11-46—20-11-49.

S. கனகசபை
சிறுப்பர்.

| திறமான | திறமான |
|---|---|
| **தேக்க மரங்கள்** | **ருணிமார்க்ஓடுகள்** |
| பல தினிசுகளிலும் | 13¾, 14 இஞ்சிகளிலும் |

வந்திருக்கின்றன

தேவைப்படுவோர் உடனே ஆடர்செய்யவும்

சேகரம் & சன்ஸ்
ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

Std. 2

## சாலாமிஸ்ரி லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல், பித்தப்பாண்டு, குன்மவாயுவு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச்சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, சூலை, சந்துவாயுவு முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனி போல் நீங்கும். தேசபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் அதிகமாய்க் காணுதலால் நேரிடும் பல நோய்களும் நீர்ந்து, தேகத்துக்குப் பலம் உண்டாகும்.

ஒருறுத்தல் விலை ரூபாய் 25-00, அரைறுத்தல் விலை ரூபாய் 12-50, கால்றுத்தல் விலை ரூபாய் 6-75

வி. பி. பி. செலவு பிரத்தியேகம்.

வி. பி. பி: மூலமும் மருந்துகள் அனுப்பப்படும்.

**சிவஞான பற்பொடி**

சிவஞான பற்பொடியினுல் காலை பல் விளக்கி வந்தால், வாய் நாற்றம், முரசு கரைதல், முரசால் சீழ்வடிதல், முரசால் இரத்தம் வருதல், பல்லில் அரணை கட்டல், பல்லைப் பூச்சி அரித்தல் முதலிய சகல துர்க்குணங்களையும் அகற்றிப் பல்லுக்குப் பெலத்தையுங் கொடுக்கும்.

பொட்டணம் 1-க்கு விலை சதம் 25

**K. ஆறுமுகம்பிள்ளை**

எமது விலாசம் நி. 3/1 தட்டாதெரு
M 196 1-2—30-4-52. கோட்டைமுனை, மட்டக்களப்பு.

இலங்கையின்
மிகப்பெரிய
—நகை—
வியாபாரிகள்
=O=

தந்தி: "JEWELLERS"
போன்: 161.

கிளைத்தானம்:
63, கன்னாதிட்டி
யாழ்ப்பாணம்.

L.K.S. LEBBAY BROS
GOLD HOUSE

நல்ல வாட்சிகள் கிடைக்குமிடம்
எல். கே. எஸ்.
லெப்பை பிரதஸ்
தங்கமாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

Printed and Puplished by S. P. Kandiah, F. I. S. A. (Lond) residing at 245; Navalar Road Jaffna. or and on behalf of the Proprietors the Saiva Paripalana Sabai, Jaffna, at their Press, the Saiva Prakasa Press, Vannarponnai, Jaffna on Friday, February 22. 1952.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org